FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301687

ஊ.த.க.பிரிவு

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் நாகப்பட்டினம் Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 10/2026 Date: நாள் 24.10.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act. Sections பிரிவுகள்: 7 and 12 of the P.C. Act, 1988

(ii) Act சட்டம்: 1988 as amended by the P.C. Sections பிரிவுகள்: as amended by the P.C.

(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act, 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.10.2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 hrs Time to : நேரம் வரை 21.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2026 Time : நேரம் 10.00 hrs 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2026 Time : நேரம் 10.00 hrs 17.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 கி.மீ. வடக்கு, நாகப்பட்டினம் மாவட்டம்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நாகப்பட்டினம் DTCP அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி.P.M.அமுதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2026 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்
(நி.எ.)(நெ)/தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு. S.பாஸ்கரன், த/பெ.சண்முகம், மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம்
(2) திரு.C.மோகன், த/பெ.சின்னையன், DTCP பதிவு பெற்ற பொறியாளர், வடக்குத் தெரு, அகரகடம்பனூர், கீழ்வேளூர் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தின் உரிய அனுமதி பெற்றும், சட்ட ஆலோசனை பெற்றும் வழக்கு பதிவு செய்ததால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-Nil-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது :- இன்று 24.10.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் கரமேஷ் குமார் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திருமதி.P.M.அமுதா, M.Sc., M.Phil., த/பெ.முத்துகிருஷ்ணன், தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) (நெடுஞ்சாலை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்/ தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், P.M.அமுதா, M.Sc., M.Phil., தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) (நெடுஞ்சாலை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்/ தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், (நில எடுப்பு) (நெடுஞ்சாலைத் துறை), தனி வட்டாட்சியர்/ பொறுப்பு தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகிய நான் நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக அலுவலர்கள் புதிய மனைப் பிரிவு மற்றும் கட்டிடங்களுக்கு பிளான் அப்ரூவலுக்கு வரும் பொதுமக்களிடம், தனியார் பொறியாளர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 23.10.2026 ஆம் தேதி மாலை 15.30 மணி முதல் 21.00 மணி வரை மேற்படி

(தனித்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24.10.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24.10.2026

15. Date & Time of despatch to the court: 24.10.2026 / 13.00Hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police
Vigilance and Anti-Corruption, Nagapattinam.

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருகரமேஷ் குமார் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது மேற்படி அலுவலகத்தில் இருந்த DTCP பதிவு பெற்ற பொறியாளரான திரு.C.மோகன், த/பெ. சின்னையன், வடக்குத் தெரு, அகரகடம்பனூர், கீழ்வேளூர் தாலுக்கா என்பவரின் சட்டை பையில் வைத்திருந்த, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய திடீர் ஆய்வு நடவடிக்கை மகசரில் கண்டவாறு கைப்பற்றப்பட்ட ரூபாய் 5500/- பணமானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் நகர் ஊரமைப்பு அலுவலக உதவி இயக்குநருக்கோ அல்லது அலுவலர்களுக்கோ கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும் நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலக அலுவலர்களின் G Pay/PhonePe கணக்குகளை சரிபார்க்கப்பட்டது, திரு.S.பாஸ்கரன், மேற்பார்வையாளர் என்பவரது செல் எண். 7418243503 ஐ சோதனை செய்த போது அவரது PhonePe கணக்கிற்கு கடந்த ஓராண்டில் Vimeela Joseph - Joseph Sahayaraj என்பவரது செல் நம்பர் 9344550528 என்ற எண்ணிலிருந்தும், கார்த்தி என்பவரது செல் நம்பர் 9566681318 என்ற எண்ணிலிருந்தும், செந்தில்குமார்-செல்லப்பன் என்ற பெயரில் இருந்தும் மொத்தம் ரூபாய் 94,000/-ம் பணமும் மேலும் சிலரது வங்கி கணக்கிலிருந்து சந்தேகத்திற்கிடமான PhonePe பரிவர்த்தனைகள் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி பரிவர்த்தனை தொடர்பாக திருபாஸ்கரன் அவர்களிடம் விசாரிக்க, அவரால் சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. இது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை மகஜருடன், மகஜரில் கண்டபடி கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய்.5500/-, மகஜரில் கைப்பற்றப்பட்ட (1) அலுவலக பணியாளர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேடு 2026, (2) வருகைப் பதிவேடு 2026, (3) தற்காலிக பணியாளர்கள் வருகை பதிவேடு 2026, (4) அத்திபுலியூர் கிராம பள்ளி கட்டிட அனுமதி தொடர்பான கடித எண் File No. SWP/BPA/891539/2026/TCP நாள் 13.10.2026, (5) திரு.C.மோகன் என்பவரின் professional Registration Certificate Registration No. NGT/CE/2021/024, நாள் 30.11.2021, (6) Chennai Town and Country Planning Office Circular in Roc.No.22824/2025/TCPS, Dated 24/07/2026, (7) நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலக 12 நிலுவை விவர அறிக்கைகள் (மாவட்ட அலுவலகம்-2, தலைமை அலுவலகம்-5, பயணாளர்கள்-5) உதவி இயக்குநர் சான்றொப்பமிட்டு ஆஜர் செய்தவை (12 தாள்கள்) மற்றும் இந்த திடீர் ஆய்வின் போது (1) திரு.S.பாஸ்கரன், மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் (2) திரு.C.மோகன், த/பெ. சின்னையன், வடக்குத் தெரு, அகரகடம்பனூர், கீழ்வேளூர் தாலுக்கா ஆகியோர்களை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். மேற்படி (1) திரு.S.பாஸ்கரன், த/பெ.சண்முகம், மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் (2) திரு.C.மோகன், த/பெ. சின்னையன், DTCP பதிவு பெற்ற பொறியாளர், வடக்குத் தெரு, அகரகடம்பனூர், கீழ்வேளூர் தாலுக்கா ஆகியோர்களின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்- P.M.அமுதா 24/10/2026 (P.M.அமுதா) தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) (நெடுஞ்சாலை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்/ தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம்.திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 23.10.2026 ஆம் தேதி மாலை சுமார் 15.30 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நகர் ஊரமைப்பு அலுவலகத்தை திருமதி.P.M.அமுதா, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) (நெடுஞ்சாலை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்/ தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருகரமேஷ் குமார் மற்றும்

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து நாகப்பட்டினம் மாவட்ட தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.P.M.அமுதா அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் உதவி இயக்குநர், பொறுப்பு துணை இயக்குநர், திருமதி.வேல்.எழிலி மற்றும் அலுவலக அலுவலர்கள் புதிய மனைப் பிரிவு மற்றும் கட்டிடங்களுக்கு பிளான் அப்புரூவலுக்கு வரும் பொதுமக்களிடம், தனியார் பொறியாளர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 23.10.2026 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தீடீர் ஆய்வுக்கு செல்ல வேண்டியது குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மூலம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் R.C.1951/2025/A4, நாள் 23.10.2026ன் படி தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்ததன் பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று மதியம் 15.00 மணிக்கு வந்த போது, காவல் ஆய்வாளர் திருகரமேஷ் குமார் என்னிடம் நாகப்பட்டினம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் புதிய மனைப் பிரிவு மற்றும் கட்டிடங்களுக்கு பிளான் அப்புரூவலுக்கு வரும் பொதுமக்களிடம், தனியார் பொறியாளர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை தெரிவித்தும், நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தை தீடீர் ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கூறியதன் அடிப்படையில், அங்கிருந்து நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருகரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 23.10.2026 ஆம் தேதி மதியம் 15.15 மணியளவில் புறப்பட்டு, நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு 15.30 மணியளவில் வந்து, நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்த உதவி இயக்குனர் திருமதி.வேல்.எழிலி மற்றும் அலுவலர்களிடம் தீடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், நகர் ஊரமைப்பு அலுவலகம் சாமந்தான்பேட்டை கடற்கரை சாலையின் தென்புறம் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு பின்புறம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம் முதல் தளத்துடன் கூடிய RCC அரசு கட்டிடமாகும். தரைதளத்தில் அலுவலகம் அமைந்துள்ளது. முதல் தளத்தில் கூட்ட அரங்கும், அலுவலர்கள் அறையும் உள்ளது. அங்கு அலுவலர்கள் யாரும் இல்லை. தரைதளத்தில் மேற்குபக்கம் உதவி இயக்குநர் அலுவலக அறையும், கிழக்கு பக்கம் மாடிப்படியும் அமைந்துள்ளது. நடுவில் சிறிய வராண்டாவும், அதற்கு எதிரே அலுவலர்கள் அறையும், அந்த அலுவலக அறையின் மேற்குபக்கத்தில் வலது புறத்தில் ஆவணங்கள் வைப்பறையும், அதற்கடுத்தாற்போல் கழிவறைகளும் உள்ளது. மேற்படி அலுவலக அறையில் அலுவலர்களுக்கு கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய தனித்தனி கேபின்கள் உள்ளது. தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு, அலுவலகத்தில் இருந்தஅனைவரையும் உதவி இயக்குநர் அறைக்கு வரவழைக்கப்பட்டு, திடீர் ஆய்வு பற்றி விவரம் தெரிவித்து அனைவரையும் தனித்தனியாக விசாரணை செய்து சோதனை செய்யப்பட்டது. அலுவலகத்தில் இருந்த அலுவலர்களை தனித்தனியாக விசாரணை செய்ததில், அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம்

கூறியதாலும் அலுவர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேட்டின் படி சரியாக இருந்ததாலும் அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகைகள் விவரம் வருமாறு:

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்
1.	திருமதி.வேல். எழிலி, உதவி இயக்குனர்	1550/-
2.	திரு.S.பாஸ்கரன், மேற்பார்வையாளர்	580/-
3.	திரு.S.ரிஸ்வான், அளவர்/உதவி வரைவாளர்	1090/-
4.	திரு.K.கிஷோர்குமார், வரைவாளர், நிலை-3	110/-
5.	திருமதி.தெ.கணிமொழி, உதவியாளர்	440/-
6.	செல்வி. ச.பிரியதர்ஷினி, தட்டச்சர்	100/-
7.	திருமதி.E.சரண்யா, துப்புறவாளர்	550/-
8.	திரு.S.டார்வின், ஓட்டுனர் (Texco)	500/-
9.	திரு.T.அரவிந்தன், இரவு காவலர்	-
10.	செல்வி. ஆஸ்மி, Associate Planner Grade-I, DTCP Planning Unit, Chennai.	170/-
11.	திருமதி.காலிதா G.சுல்தானா, Assistant Planner Grade-I, DTCP Planning Unit, Chennai.	1100/-

மேலும் மேற்படி அலுவலகத்தில் இருந்த வெளிநபரான திரு.C.மோகன், த/பெ. சின்னையன், வடக்குத் தெரு, அகரகடம்பனூர், கீழ்வேளூர் தாலுக்கா என்பவரிடம் விசாரிக்க தான் ME., படித்துள்ளதாகவும், கீழ்வேளூரில் MR கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் தொழில் செய்து வருவதாகவும், அத்திப்புலியூர் MRT & ABR Matriculation பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அப்ரூவல் வாங்குவதற்காக தான் அப்ளைசெய்ததாகவும், அது நிராகரிக்கப்பட்டு அதற்கான ஆவணங்களை சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நகர் ஊரமைப்பு தலைமை அலுவலகத்தில் கொண்டு போய் கொடுத்துவிட்டு, நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரை சந்திக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்த போது, அவரது சட்டைப் பையில் இருந்து ரூபாய் 5500/-ம், மணிபர்சில் இருந்து ரூபாய் 300/-ம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறியதால், மேற்படி தொகையானது சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் நகர்புற ஊரமைப்பு அலுவலக உதவி இயக்குநருக்கோ அல்லது அலுவலர்களுக்கோ கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக மேற்படி பணம் ரூபாய் 5500/- திடீர் ஆய்வு நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்டது. தனியாக பர்சில் வைத்திருந்த பணம் ரூபாய் 300/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட அலுவலர்-களின் G-Pay கணக்குகளை சரிபார்க்கப்பட்டது. திரு.S.பாஸ்கரன், மேற்பார்வையாளர் என்பவரது செல் எண். 7418243503 ஐ சோதனை செய்த போது அவரது PhonePe கணக்கிற்கு கடந்த ஓராண்டில் Vimeela Joseph - Joseph Sahayaraj என்பவரது செல் நம்பர் 9344550528 என்ற எண்ணிலிருந்து ரூபாய் 64,500/-ம், கார்த்தி என்பவரது செல் நம்பரிலிருந்து 9566681318 என்ற எண்ணிலிருந்து ரூபாய் 10000/-மும், செந்தில்குமார்-செல்லப்பன் என்ற பெயரில் இருந்து 10,000/-மும் ஆக கூடுதல் ரூபாய் 94,000/-ம் பணமும் மேலும் சிலரது வங்கி கணக்கிலிருந்து சந்தேகத்திற்கிடமான PhonePe பரிவர்தனை கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் தனது உறவினரான கார்த்தி என்பவரது செல் எண்.9566681318 என்ற எண்ணிற்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் சிலரது செல்போன் எண்கள் அனுப்பப்பட்டு பண பரிவர்தனைகள் நடைபெற்றுள்ளது கண்டறியப்பட்டது. மேற்படி பரிவர்த்தனை தொடர்பாக திருபாஸ்கரன் அவர்களிடம்

விசாரிக்க. அவரால் சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. இந்த திடீர் ஆய்வின்போது (1) அலுவலக பணியாளர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேடு 2026. (2) வருகைப் பதிவேடு 2026. (3) தற்காலிக பணியாளர்கள் வருகை பதிவேடு 2026. (4) அத்திபுலியூர் கிராம பள்ளி கட்டிட அனுமதி தொடர்பான கடித எண் File No. SWP/BPA/891539/2026/TCP நாள் 13.10.2026. (5) திரு.C.மோகன் என்பவரின் professional Registration Certificate Registration No. NGT/CE/2021/024. நாள் 30.11.2021. (6) Chennai Town and Country Planning Office Circular in Roc.No.22824/2025/TCPS. Dated 24/07/2026 மற்றும் (7) நாகப்பட்டினம் நகர் ஊரமைப்பு அலுவலக 12 நிலுவை விவர அறிக்கை (மாவட்ட அலுவலகம்-2. தலைமை அலுவலகம்-5. பயணாளர்கள்-5) 12 தாள்களை உதவி இயக்குநர் சான்றொப்பமிட்டு ஆஜர் செய்ததை திடீர் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் முடிவில் திரு.Sபாஸ்கரன். மேற்பார்வையாளர். நகர் ஊரமைப்பு அலுவலகம். நாகப்பட்டினம் மற்றும் திரு.C.மோகன். த/பெ. சின்னையன். வடக்குத் தெரு. அகரகடம்பனூர். கீழ்வேளூர் தாலுக்கா என்பவரை தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என்னால் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 23.10.2026 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது. **Hon'ble Sir, Submitted:** Received the Computer typed written complaint from the complainant on **24.10.2026 at about 10.00** hours, after getting suitable instructions from the Superior Officers and Law Officers of DVAC, Chennai, I am registering a case in Nagapattinam Vigilance and Anti-Corruption **Cr.No.10/2026**, U/s. 7 and 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at **17.00 hours on 24.10.2026**.

24.10.2026

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

Original FIR along with the Original complaint of Tmt.P.M.Amutha, Special Tahsildar(Land Acquisition)(Highways), Collectorate Nagapattinam, Incharge Temporary District Deputy Inspection Cell Officer, Nagapattinam District, Surprise Check Proceedings cum Mahazar, Statement of (1) Tr.S.Baskaran, S/o.Shanmugam, Supervisor, DTCP Office, Nagapattinam and (2) Tr.C.Mohan, S/o.Chinnaiyan, DTCP approved private Engineer of Agarakadampanur in Kilvelur Taluk, Nagapattinam District and the District Collector, Nagapattinam proceedings in No. R.C.1951/2025/A4, Dated 23.10.2026 are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Nagapattinam, copy of the FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai and a copy filed in the CD file.

24.10.2026

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.